# நாம் முக்தி பெறுவதற்கு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய போதனைகள்

சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்

பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவாக இருப்பவர் அருணகிரிநாதர் ஆவர். இவர் தன் திருப்புகழில் முருகனை "பக்தியால் யான் உனைப் பலகாலும் பற்றியே மாதிருப்புகழ்பாடி" என்று கூறுவது போல சுவாமிகளின் பாடல்கள் அனைத்தும் பக்திச் சுவை ததும்புபவை. சித்தாந்தக் கருத்துகள் நிரம்பியவை. உவமை என்னும் உத்தியை சுவாமிகள் அதிகம் பயன்படுத்தியிருப்பதால் பாடல்கள் அனைத்தும் இலக்கியம் மற்றும் இலக்கணச் சுவை மிகுந்தும் இருக்கும். இந்தச் சுவையானது எப்படி இருக்கும் என்றால் பூமாலையில் ஊடுருவிச் செல்லும் இழைநார் போல பக்திப் பாடல்களில் மனிதனைப் பக்குவப்படுத்தி அறக்கருத்துகளைப் போதிப்பவையாக இருக்கும்.

மனிதனாகப் பிறந்து, நம்மிடையே வாழ்ந்து, குக பரமேஸ்வரன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்டு, முருகனின் மீது 6666 பாடல்களை அருளியவர். 19ஆம் நூற்றாண்டில் தோன்றியவர். ஞானிகள் நம்முடன் வாழ்ந்து, இப்போது மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று குகசாயுச்சிய நிலையில் இருப்பவர். மகான் வாழ்ந்த இந்த சென்னை மாநகரத்தில், திருவான்மியூரில் ஜீவஜோதியாக இருந்து அருள்பாலிக்கின்ற ஞானி அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரு குருதாச சுவாமிகள் ஆவார். இவர்கள் அருளிய பாடல்களில், மனித உயிர்கள் எப்படியாகிலும், முருகனின் திருவருளைப் பெறவேண்டும் என்ற தன்னலமற்ற தியாகத்தினால் பல நல்ல போதனைகளை நமக்குக் கூறியுள்ளார்கள். பாடல்களைப் பாடும் போதும், அவற்றைப் படிக்கும் போதும், நம் சிற்றறிவுக்கு எட்டாத பல போதனைகளையும், உவமைச் சிறப்புகளையும் முருகனின் மெய்யடியார்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இக்கட்டுரையை உங்களுக்கு அளிக்கிறேன்.

மனிதன் இந்த பூமியில் பிறந்தவுடன் அவனுடைய பிறப்பை, மதம் என்ற போர்வையிலும், ஜாதி என்ற பிரிவினையிலும் பிரித்து, அவனைத் தரம் பிரிக்கின்றனர். மகாகவி பாரதியார், "ஜாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி, உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று கூறுகிறார். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் "திருப்பழநி" பதிகத்தில் "நானா ஜாதிகுல முரு நாமம் பாராமல்" என்று எடுத்துரைக்கிறார். ஆகையால் சுவாமிகள், மனிதர்களை எவ்வாறு பாகுபடுத்துகின்றார் என்பதை அடியேன் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன்.



**1. சுவாமிகள் மனிதர்களை ஐவகையாகப் பாகுபடுத்துகிறார்.**

1. மாயை என்னும் வாழ்வில் வாழ்ந்து, முருகனை நினையாதவர்கள் அதமருள் அதமர்.
2. வாழ்வில் அதிகமாகவும், இறைவழிபாட்டில் சிறிதளவும் நினைப்பவர்கள் அதமர்.
3. வாழ்விலும், இறைவழிபாட்டிலும் சமமாக இருப்பவர்கள் மத்திமர்.
4. இறைவழிபாட்டில் அதிகமும், பந்தமிகு வாழ்வில் சிறிது குறைவும் உள்ளவர்கள் உத்தமர்.
5. எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் இறை சிந்தனை எப்போதும் இருப்பவர்கள் உத்தமருள் உத்தமர் என்று நமக்கு சுவாமிகள் போதிக்கின்றார். ( திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 4ஆவது வஞ்சியில், செய்யுள் 63 முதல் 67 வரை)

**அதமருள் அதமர்கள் உத்தமருள் உத்தமராக பக்குவம் பெறுவதே மனித குலத்துக்கு ஒரு மேம்பாடு ஆகும்.**

**2. தீயனவற்றை அகற்றல் : 10 வகை**

1.பொய் சொல்லல், 2. கோள் சொல்லல், 3. கோபித்துச் சொல்லல், 4. பயனில சொல்லல், 5. களவு செய்தல், 6. வறிதே தொழில் செய்தல், 7. கொலை செய்தல், 8. கொலை செய்ய நினைத்தல், 9. காமப்பற்று, 10. ஆசை. இதில் முதல் நான்கும் வாக்கின் தீக்குணம். அடுத்த மூன்று உடம்பால் செய்யப்படும் தீக்குணம், இறுதி மூன்றும் மனத்தால் செய்யப்படும் தீக்குணம். இந்தத் தீய குணங்கள் இறைவனின் அருள் இல்லாமல் நிச்சயமாக நீங்காது என்பதை சுவாமிகள் நமக்கு போதிக்கிறார்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லவை செய்தல் ஓம்புமின்'' (புறநானூறு 29) மனிதன் நற்பண்புகளை விருத்தி செய்ய இயலாவிடினும் தீயபண்புகள் தன்னைச் சாராமல் பாதுகாத்துக் கொள்ள வேணடும்.

**3. தீய வினைகள் எவ்வாறு நமக்குச் சேருகின்றன?**

அவரவர் செய்த நல்வினை, தீவினைக்கு ஏற்றவாறு நாம் இன்பத்தையும், துன்பத்தையும் துன்பத்திலும் இப்பிறவியில் அனுபவிக்கிறோம். நாம் இன்பத்திலும் இருக்கும் போது செய்யப்படும் தீய காரியங்கள் ஆகாமிய வினை எனப்படும். இந்த ஆகாமிய வினை செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்த விருத்தி 14.

1. காமம் 2. குரோதம் எனப்படும் சினம், 3.உலோபம் எனப்படும் ஈயாமை, 4. மோகம்

எனப்படும் ஒரு பொருளின் மீது அதிக ஆசை, 5. மதம் எனப்படும் செருக்கு, 6. மாற்சரியம் எனப்படும் பொறாமை, 7. அவமதிப்பு, 8.வேட்கை, 9. நமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரவேண்டும் என்று எண்ணுதல், 10.தன்னையே உயர்த்திப் பேசுதல், 11. பரதார கமன விருப்பம், 12. துவேம், 13. பிறர் கண்டு புகழுமாறு பொருந்தாது அளிக்கும் தானம் மற்றும் 14. நான் என்ற அகந்தை. இந்த 14 தீய ஆகாமிய வினைகளை ஒழித்தால் நம் பிறப்பும் ஒழியும் என்று சுவாமிகள், இயற்றிய சிவஞான தீபம் நூலிலே தெள்ளத்தெளிவாக நமக்கு ஒரு சிறந்த போதனையைக் கூறியிருக்கிறார்கள்.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம் என்று நீதி நூலிலே சொல்லப்பட்டிருக்கிறது. இறந்தாலும் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம் என்றும் அதிலே கூறப்பட்டிருக்கிறது. அரிச்சந்திர மகா சக்கரவர்த்தி எந்தஒரு சூழ்நிலையிலும் பொய் சொல்லாமல் இருந்ததால் அவர்களுடைய சரித்திரம் இன்றும் நம்மிடம் நிலைத்து நிற்கிறது என்பதை உணரலாம்.

பொய்யும், பொறாமையும் கூறும் நாக்கானது முதுமைக் காலத்தில் கோழை கட்டி மூச்சிரைக்கும் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

ஒருவன் பொய் சொல்லாமல் வாழ்ந்தால், அதற்குப் பலனாக எல்லா நலன்களும் வந்து சேரும் என்று திருக்குறளில் 296ஆவது பாடலில் திருவள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

சுவாமிகள் வாழ்க்கையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் – ஆன்ம இலாபம் கருதி பொய் கூறியதால் தன் வாழ்நாளில் சுவாமிகள் பழநி என்ற திருத்தலத்திற்குச் செல்ல முடியாமல் போயிற்று. அதற்காக சுவாமிகள் பழநி முருகனிடம், "மன்னார் சின்மயனே யெனை வாவென் றேயழையாய் தென்னார் தென்பழநித் திருக் கோயி லுள்ளாயே" என்று கண்ணீர்விட்டு அழுதார். இந்தப் பாடலைப் படிக்க வேண்டும் அல்லது கேட்க வேண்டுமானால் நேயர்களாகிய நீங்கள் www.pambanswamigal.org என்ற இணையதளத்திலே கண்டும் கேட்டும் உணரலாம். மேலும் சுவாமிகள் "பிழை பொறுக்க முறையீடு" என்ற ஓர் அருமையான பதிகத்தையும் இயற்றியுள்ளார்கள்.

சிவஞானம் பெற்று சிவனை உணர்ந்து அழுந்தி பேரின்பம் துய்க்க விரும்புவோர் பின்பற்ற வேண்டிய கட்டளைகளாகச் சுவாமிகள் பதினைந்தைக் குறிப்பிடுகிறார். அவை பின்வருமாறு :-

1. பொய் புகலாமை, 2. கள்ளஞ் செய்யாமை, 3.இலாகிரிப் பொருள்களை உண்ணாமை, 4. கொலை செய்யாமை, 5. குருநிந்தை செய்யாமை, 6. துட்டசகவாசம் நீத்தல், 7. வைதிக சைவசாது சங்க சகவாசம் விரும்பல், 8.வீண்கதைகளைப் படியாதிருத்தல், 9. உண்மைக்கு மறுகோளாம் புத்தகத் திரிபுகளைக் கண்டு மனிதனையும் சகோதரராகப் பாவித்தல், 13. எல்லார் உள்ளமும் தன்னை விழையுமாறு அடங்கி நடத்தல். 14. குரு விசுவாசம் பிறங்க நிற்றல், 15. அளவிலா மறைகள் ஆகமமும் நாடரிய குமாரக் கடவுளுடைய செந்நோன்றாள்களை மறவாது பக்தி செலுத்துதல் ( சிவஞானதீபம் ). முன்பு குறிப்பிட்ட சித்த விருத்திகள் 14ஐயும் நீக்கி, இக்கட்டளைகள் 15ஐயும் கடைப்பிடித்தால் ஒருவன் மேம்பாடடையலாம்.

**4. ஜீவ காருண்யம் :**

வள்ளல் பெருமான் ஜீவகாருண்யத்தில் ஒரு முக்கிய செய்தியை நமக்கு உரைக்கிறார். "நாம் இறந்த பிறகு நம்மைப் புதைக்கும் இடம் இடுகாடு, அதுபோல் இறந்த விலங்குகளை அடக்கம் செய்யும் இடுகாடாக உன் வயிறு இருக்கக் கூடாது" என்று நமக்கு கூறும் விதம் இனியாவது நாம் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஒருநாள் திருநெல்வேலிக்கு அருகே உள்ள நசரத்பேட்டை என்ற ஊருக்குச் சென்றார் அங்கே உள்ள ஒரு சிவனடியார் சுவாமிகளுக்கு அன்னம் பாலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவருடைய வீட்டிற்கு எழுந்தருளச் செய்தார். அப்போது சுவாமிகள் அங்கு சென்ற போது,அந்த வீட்டில் உள்ள திண்ணையில் ஒரு மூட்டைப் பூச்சி இருப்பதைக் கண்டார் சுவாமிகள், அந்த மூட்டைப் பூச்சியை மிகவும் லகுவாக கையில் எடுத்து அவ்வீட்டுச் சிறுவனிடம் கொடுத்து "இதை வெளியில் விட்டுவிடு," என்று கூறி அந்த சிறுவன் கையில் கொடுத்தார்கள். ஆனால் அச்சிறுவன் அந்த மூட்டைப் பூச்சியை நசுக்கி கொலை புரிந்தான். அதைக் கண்ட பார்த்த சுவாமிகள் இவ்வீட்டில் "இழவு நடந்துள்ளது யாம் புசியோம்" என்று கூறினார்கள். அதைக் கண்ட அவ்வீட்டுப் பெரியவர்கள் மிகவும் மனம் வருந்தினர். அன்றைய தினம் சுவாமிகள் உணவு உட்கொள்ளாமல் இருந்து விட்டார்கள்.

**5. உணவுக் கட்டுப்பாடும், புலால் உண்ணாமையும் :**

ஒருவர் சாப்பிடுகின்ற உணவுத் தன்மைக்கு ஏற்றாற் போல் தான் அவர்களுடைய குண நலன்களும் அமையும். வயிறு நிறையச் சாப்பிடுவதும், இறை நாமத்தைக் கூறாதவர்களும் அவர்களுடைய வாழ்வின் முடிவில் காக்கைக்கே தாம் இரையாகி ஒழிவர் என்று நாவுக்கரசர் கூறுவதை சுவாமிகள் ஞானவாக்கிய நூலில் "இரை தேடுவதோடு இறையையும் தேடுபவர் உயர் மதியுடையார்" என்று நமக்கு போதிக்கிறார். நாக்கு சுவை தேடி மிக்க சுவையான உணவைக் கொள்ளாமல் பசி அடங்கும் நிமித்தம் நல்லுணவை உண்ண வேண்டும் என்று "பெருஞ்சுவை ஊணின்று அருந்துக சிறுக" என்னும் ஞானவாக்கியத்தில் நமக்கு போதிக்கிறார். சுவாமிகள் தன் வாழ்நாளில் உப்பு, புளி, நீக்கி உணவு உட்கொள்ள முயன்றதால் உடல் நலிவுற்றார். பின்பு முருகப் பெருமான் உத்தரவால் இந்துப்பு கலந்து உணவு உட்கொண்டார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், சுவாமிகள் நமக்கு போதனை செய்தது மட்டும் அல்லாமல் தானும் அவ்வாறு நடந்து கொண்டார் என்பது தான். இதுவே உண்மை, சத்தியம் ஆகும்.

**6. சீடர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் ?**

சுவாமிகள் அருளிய ஞானவாக்கியத்தில் "குருஅருள் இன்றி அருள் வரல் இன்றே" குருவின் அருள் இல்லாமல் இறை அருள் வருவதில்லை என்ற வாக்கியத்திற்கு இணங்க ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வாழ்ந்த திருப்பள்ளி வீதியில் உள்ள மிகச் சிறிய வீட்டில் கருவில் உருவாகி, பின்பு வேறொரு வீட்டில் பிறந்தவர் திரு. நாட்யாச்சார்யா ஸ்ரீ எஸ். பாலசந்திரராஜ் அவர்கள். முருகனின் திருவருள் முழுமையாகப் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் சுவாமிகள் அருளிய "சண்முக கவசம்" என்ற பதிகத்தை தனக்கே உள்ள அரிய இசை ஞானத்தால் சுவாமிகளின் உள்ளம் குளிரும் வண்ணம் மிகவும் அற்புதமான 16 இராகத்தில் சண்முககவசம் இதழின் ஒத்துழைப்புடன் இசைவடிவாக்கி குறுந்தகடாக வெளியிட்டிருக்கிறார். அபிராமிபட்டர் என்ற ஒரு சிறந்த

அடியார் திருக்கடையூர் அபிராமி அன்னையிடம் "நமக்கு 16 வகைச் செல்வங்களும் கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் கலையாத கல்வியும்" என்ற பாடலை அருளினார்கள். அதுபோல் நாட்யாச்சார்யா ஸ்ரீ எஸ். பாலசந்திரராஜ் அவர்கள் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய சண்முககவசத்தை 16 இராகத்தில் வடிவமைத்திருப்பது ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுவது போல இந்த சண்முக கவசத்தைக் கேட்டாலும், இராகத்துடன் பாடினாலும் நமக்கு நம்முடைய உடலைக் காப்பது மட்டும் அல்லாமல், 16 வகைச் செல்வங்களும் நிச்சயம் வந்து சேரும் என்பதை உணர்த்துகிறது.

அது மட்டும் அல்லாமல், சுவாமிகள் அருளிய ''தங்க ஆனந்தக் களிப்பு'' என்ற பாடலும் இசையமைக்கப்பட்டுள்ளது. இப்பாடல், சுவாமிகள் சிதம்பரத்தில் உள்ள ஓர் அன்பரின் இல்லத்தில் பாடியபோது அங்கிருந்த பொன்னுசுவாமி என்பார் தம் உள்ளுணவர்வு தூண்டவும், தனது வீட்டினுள் சென்று கொணர்ந்த ஓர் உருத்திராக்க மாலையை சுவாமிகளின் கழுத்தில் அணிவித்து, மேலும் பாடுக என்ற விருப்பு தெரிவித்த வரலாறு ஆகும். உலக வாழ்வாய் உள்ள பொன்னுக்கும், பரமவாழ்வாய் உள்ள சுப்பிரமணிய பிரமத்திற்கும் பொருளாமாறு இப்பாடல் அமைந்துள்ளது. தங்கம், தங்கம் என 43 முறை அச்சொல் வரும்படி பாடி 43 முக்கோண சக்கரத்தில் இயங்குமாறு மந்திரசக்தியை உள்ளடக்கிய பாடல் ஆகும்.

மேலும் வைர கிரீடமாக ''குமாரஸ்தவம்'' இசையமைக்கப்பட்டுள்ளது. "குமாரஸ்தவம்" ஏன் வைர கிரிடம் என்று சொல்லப்பட்டது என்றால் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் எந்த ஒரு பதிகத்தையும் படிப்பதற்கு முன்போ அல்லது முடிவிலோ மெய்யடியார் குமாரஸ்தவத்தை ஓத வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்கள். இதனுடைய தேவ ரகசியம் என்னவென்றால், குமாரஸ்தவம் ஓதுபவர்களுக்கு நிச்சயம் முக்தி கிடைக்கும் என்பது அடியேனுடைய கருத்தாகும். இப்பாடல் சுவாமிகளால் கி.பி. 1918ஆம் ஆண்டு ஆடி மாதம் 7ஆம் தேதி அன்று இயற்றப்பட்டது. இஃது அருச்சனை புரியும் காலத்துஞ் சொல்லத் தக்கது ஆகும். குமார பரமேஸ்வரரின் பெருங்கருணையையும், ஏனைய சிறப்புகளையும், இவை கந்தபுராணச் சுருக்கம் என்று கூறுமளவு, சுருங்கக்கூறி விளங்க வைக்கத்தக்கவை.

மேற்கண்ட மூன்று பதிகங்களும், நாட்யாச்சார்யா ஸ்ரீ எஸ். பாலசந்திரராஜ் அவர்களின் மகள் செல்வி சிவரஞ்ஜனி அவர்கள், மாணிக்க வாசகர் சிவபுராணத்தில் "பொருள் உணர்ந்து சொல்வார் சிவபுரத்தினில் உள்ளார் சிவனடிக்கீழ்" என்று கூறியது போல் பாடல்களின் பொருள் உணர்ந்து பாடியிருப்பது, இவர்களுடைய இசையின் ஞானத்தை மட்டும் அல்லாமல் சுவாமிகளின் மீது உள்ள குருபக்தியையும் நமக்குத் தெரிய வைக்கிறது.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மீது அளவு கடந்த பக்தி கொண்டுள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் சுவாமிகள் அருளிய "குமாரஸ்தவம்" என்ற பதிகத்தை தமிழ் மண் கொண்ட முருகனின் திருத்தலங்களில் சுமார் 200 கல்வெட்டுகள் பதித்துள்ளவர் "சண்முக கவசம்" மாத இதழின் சிறப்பாசிரியர் குகஸ்ரீ குமாரஸ்தவம் இராமானுஜம் சுவாமிகள் அவர்கள். இவர்கள் சுவாமிகளின் புகழைப் பறை சாற்றி வருகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது திருவள்ளுவரின் வாக்குக்கு இணங்க "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற குறள் தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது.

இப்படி சிறப்பு வாய்ந்த பதிகங்கள் அடங்கிய ஒலிக் குறுந்தகடு சான்றோர்களும், அறிஞர்களும், மெய்யடியார்களும் வீற்றிருந்த மாபெரும் சபையில் 27.07.2012 அன்று நம் நலனுக்காக வெளியிடப்பட்டது. இவரைப் போல நாமும் நம் வாழ்நாளில் நம்மால் முடிந்த ஆன்மிகச் செயல்களைச் செய்து சுவாமிகளின் சீரடிகளை முக்திக்கு வழி காண்போமாக.

மேலும் பல்வேறு போதனைகளை நமக்குக் குருநாதர் பாம்பன் சுவாமிகள் கூறியுள்ளார்கள், அவற்றை அடுத்து வரும் இதழ்களிலே நேயர்கள் படித்து உணரலாம்.